# நாடி

Pulse of the Singapore Muslim Community

நாடி 17 ஹிஜ்ரி 1433 முஹர்ரம் டிசம்பர் 2011 இலவசம்


# குடும்பப் பிணைப்பிற்கு குடும்ப தினம்



# குடும்பப் பிணைப்பை வலுப்படுத்துவோம்
## ஹஜ் பெருநாள் கொண்டாட்டத்தில் அரிய பரிந்துரை

சிங்கப்பூர் முஸ்லிம்கள் 6.11.2011 அன்று ஹஜ் பெருநாளை வெகு சிறப்பாகக் கொண்டாடினார்கள். எல்லா பள்ளிவாசல்களிலும் அவர்கள் திரண்டு பெருநாள் தொழுகையில் கலந்து கொண்டனர்.

தலைமை முஃப்தி டாக்டர் முஹம்மது ஃபத்ரிஸ் பக்கரம், தெபான் கார்டன்ஸ் ஹசனா பள்ளிவாசலில் பெருநாள் தொழுகையை நடத்தினார். தகவல் தொடர்பு, கலைகள், முஸ்லிம் விவகார அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் அதில் கலந்து கொண்டார்.

"சிங்கப்பூர் முஸ்லிம்கள் தங்கள் குடும்பங்களை வலுப்படுத்துவதற்கான கடப்பாட்டுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று தலைமை முஃப்தி தமது உரையில் வலியுறுத்தினார்.

அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம் அந்தக் கருத்தை வரவேற்றார். கடந்த சில ஆண்டுகளாகவே மலாய் முஸ்லிம் சமுகம் அதில் கவனம் செலுத்திவருகிறது. உரிய பலன்களை அடைவதற்கு நாம் முறையாக அதனைச் செயல்படுத்த வேண்டும். பெற்றோர்கள் பிள்ளைகளின் முன்னேற்றத்திற்குப் பாடுபட வேண்டும். அதற்குரிய நிதிவசதிகளை அவர்கள் பெறுவது அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.

முன்னைய அனுபவங்களை வைத்துப் பார்க்கும் போது முஸ்லிம் சமூகம் மூன்று அம்சங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்று நோன்புப் பெருநாள் செய்தியிலும் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் தெரிவித்தார். பிள்ளைகளின் கல்வி முதல் அம்சம். நமது எதிர்காலமே பிள்ளைகள் தான் என்பதால் அவர்களின் கல்வியில் நாம் முதலீடு செய்ய வேண்டும். நமது சுய உதவி அமைப்புகள் வழங்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி, பிள்ளைகள் முன்னேறுவதை பெற்றோர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.



நமது ஊழியர்களின் வேலைவாய்ப்பு, வேலைத் திறன்கள் காலத்துக்கு ஏற்ப மேம்பட்டிருக்க வேண்டும். எனவே, புதிய திறன்களைக் கற்றுக் கொள்ளவும், மறுபயிற்சி பெற்றுக் கொள்ளவும் நாம் முயல வேண்டும். இது இரண்டாவது அம்சம். மூன்றாவது அம்சம் சேமிப்பு. செலவுகளை நாம் குறைத்துக் கொண்டு பிள்ளைகளின் கல்வித் தேவைகளுக்கும், நமது சுகாதாரத் தேவைகளுக்கும் பணத்தைச் சேமிக்க வேண்டும்.

நாம் அயராது முயற்சி செய்திருப்பதால், சிங்கப்பூர் மலாய்-முஸ்லிம் சமூகம் முன்னேற்றம் அடைந்துள்ளது. வாழ்க்கையில் மேம்பட்டிருப்பவர்கள் பின்தங்கியிருப்பவர்களுக்கு உதவ வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பெருநாள் தொழுகைக்குப் பிறகு குர்பானி நடைபெற்றது. அந்தப் பகுதியைச் சேர்ந்த உதவி தேவைப்படும் பல குடும்பங்களுக்கு ஆட்டிறைச்சியை அமைச்சர் வினியோகித்தார்.

ஹஜ் பெருநாள் குர்பானி 42 பள்ளிவாசல்களில் நடைபெற்றது. ஆஸ்திரேலியாவிலிருந்து 4,000 ஆடுகள் தருவிக்கப்பட்டன.

# அதிபர் டோனி டானுக்கு முஸ்லிம் சமூகம் வரவேற்பு



சிங்கப்பூரின் ஏழாவது அதிபராகப் பதவியேற்றுள்ள டாக்டர் டோனி டானுக்கு முஸ்லிம் சமூகம் வரவேற்பும் நல்வாழ்த்தும் தெரிவித்திருக்கிறது.

நமது சமூகத்துக்கு ஏராளமான நன்மைகளை, நற்பணிகளைச் செய்திருக்கிறார் டாக்டர் டோனி டான் என்று புகழாரம் சூட்டினார் தகவல், தொடர்பு, கலைகள், முஸ்லிம் விவகார அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம்.

செம்பவாங் பள்ளிவாசலில் 30.8.2011 அன்று பெருநாள் தொழுகையின்போது செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், முன்னாள் அமைச்சராக, துணைப் பிரதமராக நீண்ட காலம் பதவி வகித்த டாக்டர் டோனி டான் ஆற்றிய சமூக நற்பணிகளை எடுத்துரைத்தார். இதே பள்ளிவாசலுக்கு 2004, 2005 ஆண்டு வாக்கில் அவர் வருகை தந்தபோது நாட்டு நலனுக்கும், சமூகப் பிணைப்புக்கும் நாம் அனைவரும் சேர்ந்து பாடுபட வேண்டும் என்று விளக்கினார். நாம் ஒன்று சேர்ந்து என்னென்ன செய்யலாம் என்பதையும் அப்போது விளக்கினார்.

டாக்டர் டோனி டான் 1979 அக்டோபர் முதல் 2006 வரை அமைச்சரவையில் இடம் பெற்றிருந்தார். கல்வி, நிதி, வர்த்தக தொழில் அமைச்சராகப் பணியாற்றிய பிறகு துணைப் பிரதமராக 1995 முதல் 2006 வரை பதவி வகித்தார். அதிபர் எஸ்.ஆர்.நாதன் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து கடந்த ஆகஸ்டு மாதம் நடைபெற்ற அதிபர் தேர்தலில் டாக்டர் டோனி டான் வெற்றிபெற்றார். அவர் ஆறு ஆண்டுகளுக்கு அதிபராகப் பதவி வகிப்பார்.

---

## ஹஜ் பயணச் சலுகைகள்

சிங்கப்பூர் ஹஜ் பயணிகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. சவூதி அரேபிய அரசாங்கம் சிங்கப்பூரிலிருந்து செல்லும் ஹஜ் பயணிகளின் எண்ணிக்கையை உயர்த்தியது. 2,180 பேர் இங்கிருந்து செல்ல விசா அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக முயிஸ் தெரிவித்தது. முன்பு 680 ஹஜ் பயணிகள் மட்டுமே செல்ல முடியும். சிங்கப்பூர் முஸ்லிம்களுக்குக் கூடுதல் விசா வழங்கும் சவூதி அரசின் முடிவுக்கு முயிஸ் நன்றி பாராட்டியது.

முயிஸ் ஹஜ் பயணம் தொடர்பான மாற்றங்களை அண்மையில் அறிவித்தது. அதன்படி கடமையை நிறைவேற்ற அதிகநாள் காத்திருக்கத் தேவையில்லை.

சிங்கப்பூரிலிருந்து முதல் தடவையாக ஹஜ் செல்பவர்கள் முதலில் முயிஸ் அலுவலகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். அதைத் தொடர்ந்து முயிஸினால் அங்கீகரிக்கப்பட்ட பயண நிறுவனங்கள் மூலம் பயண ஏற்பாடுகள் செய்து தரப்படும். ஹஜ் பயணத்திற்கு 6000 வெள்ளி செலவாகும்.

தனியாக ஹஜ் செல்லவிரும்பும் பெண்கள் புதிய மாற்றங்களின்படி 40 வயதிலேயே இனி விண்ணப்பிக்கலாம். முன்னைய வயது வரம்பு 45. அதன்படி 45 வயதுக்குக் குறைவான பெண்களுடன் கணவர் அல்லது தந்தை போன்ற மிக நெருங்கிய உறவினர்கள் செல்ல வேண்டும்.

18 வயதுக்குக் குறைவான பிள்ளைகளுடன் ஹஜ் செல்ல விரும்பும் பெற்றோர்கள் இனிமேல் சேர்ந்தே விண்ணப்பிக்கலாம். முன்பு தனித்தனியாக விண்ணப்பம் செய்யும் நிலை இருந்தது. முயிஸ் 18.7.2009 அன்று இந்த மாற்றங்களை வெளியிட்டது.

# இந்திய முஸ்லிம் அமைப்புகளுக்கு வகஃப் நிதி

இந்திய முஸ்லிம் அமைப்புகளுக்கு ஒரு மில்லியன் வெள்ளிக்கு மேல் வகஃப் நிதியை முயிஸ் வழங்கியது. வகஃப் அறக்கட்டளை சொத்துகள் மூலம் 2010ல் 3 மில்லியன் வெள்ளிக்கு மேல் வருமானம் திரட்டப்பட்டது. முந்திய ஆண்டு வருமானத்தைக் காட்டிலும் இது 39% அதிகம் என்று முயிஸ் தெரிவித்தது. 20.8.2011 அன்று பிராடல் ரோடு சிங்கப்பூர் இஸ்லாமிய நிலையத்தில் வகஃப் வினியோக நிகழ்ச்சி நடைபெற்றது. வருமான விவரங்களை முயிஸ் தலைவர் அலாமி மூஸா அப்போது வெளியிட்டார்.

இந்திய முஸ்லிம் அமைப்புகளுக்கும் பள்ளிவசாசல்களுக்கும் பத்து லட்சம் வெள்ளிக்கு மேல் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அதில் அல் அப்ரார் பள்ளிவாசல், அப்துல் கபூர் பள்ளி வாசல், ஜாமியா சூலியா பள்ளிவாசல் ஆகியவை $1,110,000 வெள்ளியைப் பெறும். இந்திய முஸ்லிம் மார்க்கக் கல்விக்கு $70,000 வெள்ளியும் அறநிதிக்கு $10,000 வெள்ளியும் அளிக்கப்படும் என்று முயிஸ் அறிவித்தது.








# சிங்கப்பூரில் ஜமால் முஹம்மது கல்லூரி மாணவர்களின் சமூகத் தொண்டு



திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை) ஆற்றி வரும் சமூகத் தொண்டுகளின் வரிசையில், சென்ற *18-9-2011* ஞாயிற்றுக் கிழமை அன்று காலை *10* மணிக்கு “செயல் திறமிக்க கருத்துப் பரிமாற்றுத் திறமைகள்” (Effective Communication Skills) என்ற தலைப்பில் பொது மக்களுக்கான இலவச கருத்தரங்கு ஒன்றை வில்கி சாலை Kaplan Institute, வில்கி வளாகம் இரண்டாவது தளத்தில் மிகச்சிறப்பாக நடத்தியது.

இலவச கல்விப் பணி மற்றும் சமூகத் தொண்டு புரிவதையே பிரதான நோக்கமாகக் கொண்ட இச்சங்கத்தின் ஏற்பாட்டில் நடந்தேறிய இக்கருத்தரங்கில் சுமார் *100* பேர் கலந்து பயன் பெற்றனர். கருத்தரங்கு மற்றும் பயிலரங்குகள் நடத்துவதில் பல்லாண்டுகள் அனுபவம் பெற்ற திரு. ஹாஜா ஜபருல்லாஹ், இந்த இலவச கருத்தரங்கை பொது மக்களுக்காக நடத்தினார்.



தமிழ் மொழி பண்பாட்டுக் கழகத்தின் தலைவர் திரு ஹரிகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு, பேச்சாளர் மன்றத்தின் சிறப்பைப் பற்றி எடுத்துரைத்தார். சங்கத்தின் செயலாளர் அப்துல் சுபஹான் கருத்தரங்கை துவங்கி வைக்க, சிறப்பு விருந்தினருக்கும் கருத்தரங்கு நடத்தியவருக்கும் சங்கத்தின் சார்பில் பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசுகளை வழங்கினார் சங்கத்தின் தலைவர் முஹிய்யத்தீன் அப்துல் காதர். சமுதாய நலனையும் மேம்பாட்டையும் கருத்தில் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்ட இக்கருத் தரங்கு பிற்பகல் *1* மணியளவில் இனிதே நிறைவுற்றது.

# ஹிஜ்ரி 1433 புத்தாண்டை வரவேற்போம்!

ஹிஜ்ரி ஆண்டு வரலாற்று அடிப்படையில் அமைந்தது. பெருமானார் முஹம்மது நபி(ஸல்) அவர்கள் மேற்கொண்ட ஹிஜ்ரத் பயணமே இந்த ஆண்டுக் கணக்குக்கு ஆதாரமாக அமைந்தது.

நபி அவர்கள் இறைவனின் கட்டளையை ஏற்று, பிறந்த ஊரான மக்காவை விட்டு மதீனாவுக்குச் சென்றார்கள். ஓர் இடத்திலிருந்து மற்றொரு ஊருக்கு, இடம் பெயர்வதைக் குறிக்கும் அரபு மொழிச் சொல்லே ஹிஜ்ரத் ஆகும். நபி பெருமான் மதீனாவுக்கு இடம் பெயர்ந்த காலக் கணக்கின் அடிப்படையில் ஹிஜ்ரி ஆண்டை அமைக்க சஹாபாக்கள்- நபி தோழர்கள்-உடன்பாடு கண்டனர். அதன்படி கி.பி. 662ஜூன் 28 திங்கட்கிழமை ஹிஜ்ரி ஆண்டு தொடங்கியது. இஸ்லாமிய ஆண்டுக்கு ஹிஜ்ரி எனப் பெயர் சூட்டியவர் இரண்டாவது ஜனாதிபதியாகப் பதவிவகித்த கலீபா உமர்(ரலி) அவர்கள்.

பிறைக் கணக்கை அடிப்படையாகக் கொண்ட ஹிஜ்ரி ஆண்டின் முதல் மாதம் முஹர்ரம். அரபு மொழியில் முஹர்ரம் என்ற சொல்லுக்கு 'விலக்கப்பட்டது' என்பது பொருள். எனவே, வேண்டாதவற்றை, தடுக்கப்பட்டவைகளை, தீயவற்றை விலக்கி வைப்பதும், விலகியிருப்பதும் மக்களின் கடமை என்பதே முஹர்ரம் வழங்கும் முக்கிய செய்தி. இதனால், அரேபியர்கள் முஹர்ரத்தை புண்ணியம் மிக்க புனிதமாதமாக மதித்து போர்வாளை உறையிலிட்டு மூடினர் என்பது வரலாறு.

ஸபர், ரபிவுல் அவ்வல், ரபிவுல் ஆகிர், ஜமாதுல் அவ்வல், ஜமாதுல் ஆகிர், ரஜப், ஷஃபான், ரமலான், ஷவ்வால், துல்கஃதா, துல்ஹஜ் ஆகியவை மற்ற *11* மாதங்கள்.

ரபிவு என்ற அரபுச் சொல்லுக்கு வசந்தம் என்று பொருள். அவ்வல் என்பது ஆரம்பத்தையும், ஆகிர் என்பது இறுதியையும் குறிக்கும். அதன்படி ரபிவுல் அவ்வல் வசந்த காலத்தின் தொடக்கத்தையும், ரபிவுல் ஆகிர் வசந்த காலத்தின் முடிவையும் குறிக்கும். அவ்வாறே ஜமாதுல் அவ்வல், ஜமாதுல் ஆகிர் ஆகியவை மழையில்லாத வரண்ட காலத்தின் தொடக்கத்தையும், முடிவையும் குறிக்கும் மாதங்கள்.

ஹிஜ்ரி ஆண்டு நிலாவின் இயக்கத்தைக் கொண்டு கணக்கிடப்படுகிறது. அதனால் ஆண்டின் ஐந்து மாதங்கள் இருபத்து ஒன்பது தினங்கள் வீதமும், மற்ற ஏழு மாதங்கள் முப்பது நாட்கள் வீதமும் கணக்கிடப்படுகின்றன. அதன்படி ஆண்டின் மொத்த நாட்கள் 355 ஆகும். இதனால் கி.பி. ஆண்டுக்கும் ஹிஜ்ரி வருடத்திற்கும் பத்து நாள் வித்தியாசம் இருந்து வருகிறது.

பிறைக் கணக்கை வைத்து பெருநாட்கள் நிர்ணயிக்கப்படுவதால் பெருநாள் தேதி நாட்டுக்கு நாடு மாறுபடுகிறது. முப்பது நாள் நோன்பிருந்த பிறகு கொண்டாடப்படும் பெருநாள் ஈதுல் பித்ரு-ஈகைத் திருநாளாகும். ஈதுல் அல்ஹா எனப்படும் ஹஜ் பெருநாள் தியாகத் திருநாள் என அழைக்கப்படுகிறது.

# புதிய ஹலால் சான்றிதழ்

முயிஸ் பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய புதிய ஹலால் சாள்றிதழ்களை அறிமுகப்படுத்துகிறது.

அதன்படி ஹலால் உணவுகளை உற்பத்தி செய்யும் சிங்கப்பூர் நிறுவனங்களுக்கு ஹலால் தொழிற்சாலை முத்திரைச் சான்றிதழும் வழங்கப்படும். அந்த நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் ஒவ்வொரு பொருளிலும் ஹலால் முத்திரை பதிக்கப்படும். அக்டோபர் மாதத்திலிருந்து இவை நடப்புக்கு வரும் என்று இஸ்லாமிய விவகார அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் ஹலால் கருத்தரங்கில் அறிவித்தார்.

ஹலால் சான்றிதழில் பாதுகாப்பு அம்சங்கள் இணைக்கப்பட்டுள்ளதால் அவற்றுக்குப் புறம்பான முறைகளில் உணவுப் பொருள்களை உள்ளூர் நிறுவனங்கள் உற்பத்தி செய்ய முடியாது. மேலும், முயிஸின் ஹலால் சான்றிதழை வைத்திருக்கும் கடைகளில் விற்கப்படும் பொருள்கள் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை புதிய அம்சங்கள் பலப்படுத்தும் என்று டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் குறிப்பிட்டார்.

*22.8.2011* அன்று நடைபெற்ற ஹலால் கருத்தரங்கில் பாதுகாப்பு அம்சங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

*10* ஆண்டுகளுக்கு முன் *530* ஹலால் சான்றிதழ் உணவுக் கடைகள் மட்டுமே இருந்தன. தற்போது அந்த எண்ணிக்கை 3,000. இது 5,000க்கு உயர்த்தப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

# PHOTO NEWS

# படச் செய்திகள்



3rd Distinguished Visitors' Programme - courtesy call at Istana, 29 Sep 2011



3rd Distinguished Visitors' Prog - breakfast hosted by DPM Tharman Shanmugaratnam, 30 Sep 2011



Pre-Haj departure briefing, 1 Oct 2011



Al Ansar Mosque upgrading project, 14 Oct 2011




Masjid Jamae Chulia Management Board Investiture Ceremony, 12 Oct 2011




Masjid Bencoolen Management Board Investiture Ceremony, 12 Oct 2011




Rahmatan Lil'Alamin Foundation (RLAF) cheque handover ceremony for Somalia, 21 Oct 2011




Mujahidah 12th Graduation Ceremony cum 6th Anniversary, 30 Oct 2011

# ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் பெருநாள் ஒன்றுகூடல்



ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம் நோன்புப் பெருநாள் ஒன்றுகூடல் நிகழ்ச்சியை-ஈதுல் ஃபித்ர் 2011 சிக்லாப் சவுத் சமூக மன்றத்தில் 18.9.2011 அன்று மாலை சிறப்பாக நடத்தியது.

சிக்லாப் இந்திய நற்பணிக்குழு முதலான அமைப்புகளின் ஆதரவுடன் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி ஆன்மீகம், மார்க்கம், சமூகம், கலாச்சாரம் அனைத்தும் ஒருங்கிணைந்த விழாவாக அமைந்தது. சிந்தைக்கும் செவிக்கும் வயிற்றுக்கும் விருந்தாக இந்த நிகழ்ச்சி அமையும் என்று அறிவிப்பாளர்கள் கூறியபடி இசை, நடனக் காட்சிகளுடன் தொடங்கியது. இர்ஃபானுல்லா, நூர் உள்ளிட்ட வானொலி, தொலைக்காட்சி கலைஞர்கள் இசைவிருந்து படைத்தனர்.

சிக்லாப் தெற்கு வட்டார அக்கம்பக்க குழுத்தலைவர் டாக்டர் உமா ராஜனும், ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத் தலைவர் ஃபரியுல்லாஹ்வும் தொடக்க, வரவேற்புரை யாற்றினர். ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் இத்தகைய நிகழ்ச்சிக்கு சிக்லாப் தெற்கு வட்டார அமைப்புகளின் ஆதரவும் ஒத்துழைப்பும் தொடரும் என்று 2011 தேசிய தின விருது-பொதுச்சேவை நட்சத்திர விருது-பெற்ற டாக்டர் உமா ராஜன் உறுதி தெரிவித்தார்.



ஏனைய அமைப்புகளுடன் இணைந்து விழாக்களைக் கொண்டாடுவதும், உதவி தேவைப்படுவோருக்கு உதவுவதும் தமது சங்கத்தின் முக்கிய கோட்பாடுகள் என்று ஃபரியுல்லாஹ் தமது உரையில் குறிப்பிட்டார். வசதியுள்ளவர்கள் மட்டுமின்றி எல்லோரும் சேர்ந்து கொண்டாடுவதே இலக்கு என்றும் அவர் கூறினார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சார்ல்ஸ் சோங், ஆன்சன் ஆங் ஆகியோர் பொன்னாடை, மாலை அணிவித்துச் சிறப்பிக்கப் பட்டனர். ஆதரவாளர்கள்




அனைவரும் மேடைக்கு அழைக்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டனர். முஸ்லிம்களையும். பிறசமய அன்பர்களையும் அணிதிரட்டி கொண்டாடப்படும் இந்த ஒன்றுகூடல் நிகழ்ச்சி உற்சாகமும் பெருமிதமும் தருகிறது என்று திரு. சார்ல்ஸ் சோங் குறிப்பிட்டார். தொடக்கமாக, மூன்று குடும்பத்தினருக்கு உதவிப்பொருள் பைகளை வழங்கிச் சிறப்பித்தார் அவர்.

பல சமய, சமூக மக்களும் இதில் கலந்து கொண்டனர். சுமார் 300 பேருக்கு சிண்டாவுடன் இணைந்து உதவித் தொகையை சங்கம் வழங்கியது. அஜ்மீர் ஸ்டோர், ஜோதி ஸ்டோர் ஆகியவையும் உதவிப் பொருள்களை வழங்கின.

நன்கொடையாளர், ஆதரவாளர் அனைவருக்கும் ஃபரியுல்லா நன்றி பாராட்டினார். பல் சுவை விருந்து உபசரிப்புடன் விழா நிறைவு பெற்றது.

## இஃப்தார்

ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம் ஜாமியா சூலியாவுடன் இணைந்து 20.8.2011 அன்று இஃப்தார் நிகழ்ச்சியையும் நடத்தியது. துணைப் பிரதமரும் நிதியமைச்சருமான தர்மன் சண்முக ரத்னம், முயிஸ் அதிகாரிகள், முன்னைய வெளியுறவுத் துணையமைச்சர் ஜைனுல் ஆபிதீன் ரஷீத், இந்திய முஸ்லிம் அமைப்புகளின் தலைவர்கள் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

நமது இன, சமய நல்லிணக்கம், ஐக்கியம், புரிந்துணர்வு ஆகியவற்றுக்கு எடுத்துக் காட்டான நிகழ்ச்சி இது என அமைச்சர் பாராட்டினார்.



## இனிய இஃப்தார் அனுபவம்
## குமாரி அ.அஸ்மது பீவி தமிழாசிரியை

*அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்). எல்லாப் புகழும் இறைவனுக்கே என்று கூறி ஆரம்பிக்கிறேன். "ரைய்யான் என்று கூறப்படும் ஒரு தலைவாசல் சுவனத்தில் இருக்கிறது. நோன்பாளியைத் தவிர்த்து வேறு எவரும் அதன் வழியாக சுவனத்தில் நுழைய மாட்டார்கள்", என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். இப்படிப்பட்ட மகத்துவம் வாய்ந்த ரமலான் மாதத்தின் பிறை 18 அன்று அப்துல் கஃபூர் பள்ளிவாசலில் இஃப்தார் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள எனக்கு ஓர் அற்புதமான வாய்ப்புக் கிட்டியது.*

*இந்நிகழ்ச்சிக்கு நான் என்னுடன் பணிபுரியும் என் இந்து சமய நண்பர்களையும் அழைத்துச் சென்றேன். குடும்பத்துடன் மட்டுமே எப்பொழுதுமே நோன்பு திறக்கும் நான் பிற இனத்தவர்களுடன் அமர்ந்து இஃப்தாரில் ஈடுபடுவதை எண்ணிப் பெருமிதம் அடைந்தேன். அந்நிகழ்ச்சியில் என் நண்பர்களைத் தவிர பிற சமயத் தலைவர்களும் கலந்து கொண்டனர். வெவ்வேறு இனம், மதம் மற்றும் சமயத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பினும், அன்று அந்தப் பள்ளிவாசலின் பன்நோக்கு மண்டபத்தில் இஸ்லாமிய மார்க்கத்தின் மற்றும் ரமலான் மாதத்தின் சிறப்புகளை எல்லோரும் ஒன்றுகூடி ஆவலுடன் கேட்டறிந்தது என்னைப் பூரிக்கச் செய்தது.*

*போரும் பூசலும் நிறைந்திருக்கும் இவ்வுலகில் பல சமயங்களைச் சேர்ந்தவர்களை ஒன்றிணைக்கும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் சிங்கப்பூரில் நடைபெறுவது சிங்கப்பூரின் பலத்தை எடுத்தியம்புகிறது. 1950ல் மாரியா ஹர்தொக்கின் (*Maria Hertogh*) சம்பவத்தின் மூலம் துவங்கிய இனக் கலவரங்கள் சிங்கப்பூர் மக்களிடையே பிளவினை ஏற்படுத்தியது. பல உயிர் சேதங்களுக்குக் காரணமாகவும் அமைந்தது. அது மீண்டும் இந்நாட்டில் நிகழாமல் இருக்கவும் அதன் விளைவுகளை நினைவுகூறும் வண்ணமும் இன்று சிங்கப்பூரில் இன நல்லிணக்க நாள் கொண்டாடப்படுகிறது.*

*உயர்நிலைப் பள்ளியில் பத்து ஆண்டுகளாக ஆசிரியராகப் பணிபுரிந்து வருவதால், இன்றைய இளைஞர்களின் மனப்போக்கை என்னால் அறிந்து கொள்ள முடிகிறது. பல வேளைகளில் மாணவர்கள், தாம் பல இன சமூதாயத்தில் வாழ்வதை மறந்து சுயநலமாகச் செயல்படுகின்றனர். வெவ்வேறு நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் மற்றும் சமய வழிபாடுகளைப் பின்பற்றும் வேற்று இனத்தவர்களிடையே வாழ்வது பல சமயங்களில் ஒரு சவாலாக அமைகிறது. இச்சவாலை எதிர்நோக்குவதற்கு வெவ்வேறு சமயத்தைப் பற்றிய புரிந்துணர்வையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்த, பல்வேறு*

அமைப்புகளும் முன்வர வேண்டும். குறிப்பாக, அப்துல் கஃபூர் பள்ளிவாசலில் நடைபெற்ற இஃப்தார் போன்ற நிகழ்ச்சிகளை மற்ற வழிப்பாட்டுத் தளங்களிலும் மேற்கொள்வது நல்லது. மேலும் இது போன்ற நிகழ்ச்சிகளில் பல இன மாணவர்களையும் கலந்து கொள்ளச் செய்வது, நிகழ்ச்சிக்குச் சிறப்பு சேர்க்கும்; பயனும் இரட்டிக்கும். இது நம் இளைய தலைமுறையினரிடம் இன நல்லிணக்கத்தை மேம்படுத்தும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து அதில் கலந்துகொள்ள வாய்ப்பினையும் வழங்கிய அப்துல் கஃபூர் பள்ளிவாசல் சமய அதிகாரி (Mosque Religious Officer), உஸ்தாத் ஜியாவுதீன் அஹ்மது அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லாப் புகழும் வாய்ந்த அல்லாஹ் தன் அருளை நம் எல்லோர் மீதும் பொழிவானாக என்ற துவாவுடன் முடித்துக்கொள்கிறேன். ஆமின்.

குமாரி அ.அஸ்மது பீவி
தமிழாசிரியை
தேசியக் கல்வி ஒருங்கிணைப்பாளர்
(NE Coordinator)
சிராங்கூன் கார்டன் உயர்நிலைப் பள்ளி

**இஃப்தார் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட, சிராங்கூன் கார்டன் உயர்நிலைப் பள்ளி தாய்மொழிப் பாடத்துறைத் தலைவர் (SH / MTL), தமிழாசிரியை திருமதி பூபதி கூறுகிறார்:**

இந்தக் கற்றல் பயணம் ஒரு நல்ல அனுபவமாக அமைந்தது. உண்மையைச் சொல்ல போனால் ஒரு புதிய உலகுக்குச் சென்றது போல் இருந்தது. “கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு” என்பார்கள். அது போல் நாம் எவ்வளவுதான் கற்றிருந்தாலும் இந்த உலகில் படித்து மற்றும் தெரிந்து கொள்வதற்கு எவ்வளவோ விஷயங்கள் உள்ளன என்பதை நான் என் பள்ளிவாசல் அனுபவம் மூலம் தெரிந்து கொண்டேன். ஒரு புதிய பள்ளிக்கூடத்திற்குள் நுழைந்த அனுபவத்தைப் பெற்றேன். பத்து ஆண்டுகளாக அப்துல் கஃபூர் பள்ளிவாசலுக்குச் செல்லும்போது கொஞ்சம் தயக்கமும் அச்சமும் ஏற்பட்டது. பொருத்தமான உடை அணிந்திருந்தேனா, என்னை உள்ளே அனுமதிப்பார்களா அல்லது தடை சொல்வார்களா என்பன போன்ற கேள்விகள் என் மனதில் அலை மோதின. ஆனால், உள்ளே நுழைந்ததும் அங்கிருந்தவர்கள் என்னை அகமும் புறமும் மலர வரவேற்ற விதம் என்னை உச்சி குளிர வைத்தது. பல இனத்தவர்கள் அங்குக் கூடியிருந்த காட்சியும் என் அச்சத்தை நீக்கியது.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில் வரவேற்புரை ஆற்றிய பள்ளிவாசல் சமய அதிகாரி அவர்களின் உரையில் இன நல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தை இஸ்லாமிய சமயம் எவ்வாறு வலியுறுத்தி வந்துள்ளது என்பதை நல்ல உதாரணங்களுடன் தெளிவாக எடுத்துக் கூறினார். கிறிஸ்தவ சமயம், பௌத்த சமயம் மற்றும் இந்து சமயம் ஆகியவற்றுடன் அவர் ஒப்பிட்டுப் பேசியது சிறப்பாக இருந்தது. அது உண்மையில் எனக்கு ஒரு நல்ல தெளிவை ஏற்படுத்தியது என்று சொன்னால் மிகையாகாது. அதைத் தொடர்ந்து தமிழில் பள்ளிவாசல் சமய அதிகாரி உரையாற்றியது என்னை மெய்சிலிர்க்க வைத்தது. ஒரு பெரும் தமிழறிஞர் மேடையேறி பேசியது போல் இருந்தது. அவருடைய உரையில் அவர் எடுத்தியம்பிய கருத்துகள் இஸ்லாமிய சமயத்தைப் பற்றி நான் கொண்டிருந்த சில சந்தேகங்களைத் தெளிவு படுத்தியது. நோன்பு இருத்தலின் முக்கியத்துவம் குறித்து அவர் பேசியது மிகவும் சிறப்பாக அமைந்தது. இஸ்லாமியர்கள் பின்பற்றி வரும் சில நம்பிக்கைகள் மற்றும் கோட்பாடுகள் குறித்து அவர் நல்ல விளக்கம் அளித்தார்.

பள்ளிவாசலில் குறிப்பாகப் பிரார்த்தனை நடைபெறும் இடத்தில் பெண்களை அனுமதிக்க மாட்டார்கள் என்று நினைத்தேன். ஆனால், இந்தப் பள்ளிவாசலில் எனக்குப் பிரார்த்தனை செய்யும் இடத்தைக் காண்பதற்குக் கிடைத்த அரிய வாய்ப்பை நான் ஒரு பாக்கியமாகத்தான் கருதுகிறேன். நான் இப்பிரார்த்தனை அரங்கத்திற்குள் நுழைந்தபோது என்னை அறியாமலே அல்லாஹ்வைப் பிரார்த்தனை செய்தேன். அவ்வரங்கத்தை விட்டு வெளியேறியபோது என் மனச்சுமை குறைந்ததுபோல் ஓர் உணர்வு ஏற்பட்டது.

# அல்ஃபலாக் ஸ்டார்ஸ் பெருநாள் ஒன்றுகூடல், இஸ்லாமிய இன்னிசைக் கலை நிகழ்ச்சி



அல்ஃபலாக் ஸ்டார்ஸ் கல்வி, கலாசார சங்கம் பெருநாள் குடும்ப ஒன்றுகூடல் நிகழ்ச்சியையும் இஸ்லாமிய இன்னிசை இரவையும் 15 அக்டோபர் 2011 மாலை நடத்தியது. விக்டோரியா ஸ்திரீட் கோல்டன் லாண்ட்மார்க் வில்லேஜ் ஓட்டலில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் முயிஸ், சிண்டா, இந்திய முஸ்லிம் பேரவை, சிங்கப்பூர் கடைய நல்லூர் முஸ்லிம் லீக், ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம், ஜாமியா சூலியா, சிங்கப்பூர் செஞ்சிலுவைச் சங்கம் உள்ளிட்ட அமைப்புகளின் பேராளர்களும், சமூகத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

அல்ஃபலாக் ஸ்டார்ஸ் தலைவர் K.O.ஷேக் அலாவுதீன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். 2009 பிப்ரவரியில் தொடங்கப்பட்ட சங்கம் சமூக நலனுக்காக, குறிப்பாக கல்வி, குடும்ப முன்னேற்றம், இளையர் மற்றும் மூத்தோர் நலம் ஆகியவற்றுக்காகப் பாடுபட்டு வருகிறது என்று அவர் குறிப்பிட்டார். மீலாது விழா, அன்னையர் தினம், குழந்தைகள் இல்ல வருகை, கல்வி கலாசாரப் பயணங்கள் ஆகியவற்றை அவ்வப்போது மேற்கொண்டு வருகிறது. ஹசனா பள்ளிவாசலில் மத்ரஸா வகுப்புகளை நடத்துவதுடன், ஆண்டுதோறும் 20 உபகாரச் சம்பளங்களையும் வழங்கிவருகிறது.

முயிஸ், பள்ளிவாசல்கள், சிண்டா முதலான அமைப்புகளுடன் இணைந்து அல்ஃபலாக் ஸ்டார்ஸ் நடத்திவரும் நிகழ்ச்சிகளையும் K.O.ஷேக் அலாவுதீன் எடுத்துரைத்தார். மலபார் பள்ளிவாசலில் நடத்தப்பட்ட இலவச மருத்துவப் பரிசோதனை ஓர் எடுத்துக்காட்டு.

அல்ஃபலாக் ஸ்டார்ஸ் இளைஞர் அணி தொடங்கிவைக்கப்பட்டது. இளைஞர்களுக்கான நிகழ்ச்சிகளை நடத்துவதும் அடித்தள அமைப்பு நடவடிக்கைகளில் பங்கேற்று நாளைய தலைவர்களை உருவாக்குவதும் அந்த அணியின் பொறுப்பு என்று தெரிவிக்கப்பட்டது. டாக்டர் ரஹ்மத்துல்லா அதன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அல்ஃபலாக் ஸ்டார்ஸ் இசை-நாடகக் குழுவும் இந்த நிகழ்ச்சியில் தொடங்கி வைக்கப்பட்டது. உள்ளூர் கலைஞர்களை உருவாக்குவது அதன் இலக்கு. செயலாளர் ஷாஹுல் ஹமீது அதன் தலைவராக நியமிக்கப்பட்டார்.

முன்னணி இசைக் கலைஞர்கள் பங்கேற்ற இசையரங்க நிகழ்ச்சி அனைவரையும் மகிழ்வித்தது. நாகூர் ஹனிபா பாடிய பாடல்களை அப்துல் மஜீது, அப்துல் ரஹ்மான், மலர்விழி, சுல்தான், சலீனா ஆகியோர் இசைத்தனர். விளையாட்டு, அதிர்ஷ்டக் குலுக்கு ஆகியவையும் இடம்பெற்றன. பங்கேற்றவர்களுக்கு 20 பரிசுகள் வழங்கப்பட்டன.